காஞ்சியில் தி.மு.க. மாநாடு ஆரம்பம்

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" : A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

சென்னை: ஆவணி 5வ சனி (21—8—54)
வெளியூர்: ஆவணி 6வ ஞாயிறு (22—8—54)

மலர்: 2
இதழ்: 59

நாட்டின் மறுமலர்ச்சியே நமது குறிக்கோள்!

சமத்துவ சமுதாயம் அமைப்போம்! போலி வேடதாரிகளை ஒழிப்போம்!!

தெளிவோடும் உறுதியோடும் போராடும் படை திரளட்டும்!

காஞ்சி மாநாட்டில் புரட்சி நடிகர் ராமச்சந்திரன் முழக்கம்

"'பகுத்தறிவு' இயக்கத்திற்கு, கலைத்துறை, வயலுக்கு உரம் போன்றது! சமுதாய வயலிலே மண்டிக் கிடக்கும் கள்ளி, காளான்களை அகற்றவும், நல்ல பகுத்தறிவுப் பயிர் வளர்வதற்கான சிறந்த உரங்களாகவும் கலைத் துறையைப் பயன்படுத்தத்தான் கலைஞர்கள் விரும்புகிறார்கள்."

"இன்றைய தமிழ்ச் சமுதாயத்திலே கலப்பு மணமும், ஜாதி ஒழிப்பும் மிகவும் அவசியமும், அவசரமுமாகச் செய்யப்பட வேண்டியவைகளாகும். கலப்பு மணம் செய்து கொள்பவர்களுக்கு சட்டத்திலே பாதுகாப்புக் கொடுத்துள்ளதாகக் கூறும் இன்றைய ஆளும் தலைவர்கள், ஜாதியை ஒழிக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறார்கள்."

"'கலப்பு மணம் நாட்டிலே பெருகி, ஜாதிகள் அழிந்து, மக்கள் அனைவரும் ஒன்று என்று ஏற்பட்டுவிட்டால், தாழ்ந்த ஜாதி, உயர்ந்த ஜாதி என்ற பேதம் ஒழிக்கப்பட்டுவிடும்; ஜாதிகள் ஒழிந்தால் முன்ஜென்ம பாவ-புண்ணியம் என்று கூறி, இன்று ஒரு வகுப்பார் உயர்ந்த நிலையிலும் உடலுழைப்பால் வாடாமலும், மேனி மெருகுடன் வாழவும்; மற்ற ஜாதியினர் உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்தாலும் கண்களிலே வழியும் நீரைத் துடைத்துக் கொண்டு, 'போன ஜென்மத்தில் செய்த பாவம்; இப்படித் துயரப்படுகிறோம்; இனி, அடுத்த ஜென்மத்திலாவது நல்ல கதி அடையலாம்,' என்று கருதிக் கொண்டு, ஊமையாய், கோழையாய், அக்கிரமக்காரனை எதிர்க்கும் எண்ணமின்றி ஆமையாய் அடங்கிக் கிடக்கும் நிலைமை மாறிவிடும்; உல்லாச ஓடம் சூறாவளியில் சிக்கி சுக்குநூறாகிவிடும்'—என்று உயர்ந்த ஜாதிக்காரர்கள் எண்ணுகிறார்கள்; அதற்கும் ஆதரவாளர்களாக உள்ள—பணக்காரர்களையும், உயர்ந்த ஜாதிக்காரர்களையும் அங்கத்தினர்களாகக் கொண்ட—இன்றைய ஆட்சியாளர்களும் உள்ளூர எண்ணுகிறார்கள்! அதை மறைப்பதற்காக, அடிக்கடி பேச்சில் மட்டும் சீர்திருத்தம், ஜாதி ஒழிப்பு, கலப்பு மணம் என்று ஆவேசமாகப் பேசி, குழியை மறைக்கும் பச்சிலை பரப்பும் பாதகத்தைப் புரிந்து வருகிறார்கள்; எனவேதான் இத்தகைய ஆபத்தானவர்கள் நிறைந்த சமுதாயத்தை மாற்றி அமைக்கும் பணியிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம்!" இந்த சமுதாய அமைப்புவிதத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

நாட்டின் மறுமலர்ச்சிக்கு எதிரிகளை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் நல்ல தெளிவும், உறுதியான உள்ளமும் பெற்றாக வேண்டும். அண்ணா அவர்களின் தலைமையிலே, இன்று அணிவகுத்து நிற்கும் இப்படை வெல்லும் என்பதிலே யாரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை அந்தப் படை வரிசை, தனது படையின் பலத்தைக் கணிக்கவும், ஒழுங்குபடுத்துவதுமே, இத்தகைய மாநாடுகளின் நோக்கம்.

அத்தகைய படை வரிசையிலே, கலைஞர் கூட்டமும், சமுதாயத்தைத் திருத்தும் பணியிலே ஈடுபட்டு, அந்த விடுதலைப் படையின் வெற்றி முரசை விரைவில் நாட்டிலே கேட்கப் பாடுபடுவோம் என்பதைத் தெரிவித்து, இந்த மாநாட்டைத் துவக்கி வைக்கிறேன்."

—என்று, 21—8—54 சனிக் கிழமையன்று, காஞ்சியில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநாட்டின், சமூக சீர்திருத்த மாநாட்டில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்.

தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள், மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசியதாவது:—

"அண்ணா அவர்களே! பகுத்தறிவுப் பாசறையில் பணி புரியும் அன்புத் தோழர்களே! வரவேற்புக் கழக உறுப்பினர்களே! வணக்கம்!

(4-ம் பக்கம் பார்க்க)

சிலந்திக் கூட்டில் புழு சிக்குவதுபோல்...!

★

"மக்களின் மன மாறுதல்களையும், வளர்ச்சிகளையும், நம்பிக்கைகளையுந்தான், வஞ்சகர்கள் திட்டமிட்டு, சமுதாயம் பூராவையும் ஒரே அணியில் திருப்பி, சிலந்திக்கூட்டிலே புழு சிக்குவது போல, இந்தச் சமுதாயத்தை, மூட நம்பிக்கைகளிலே சிக்க வைத்தார்கள்!"

—காஞ்சிபுரம் சமுதாய சீர்திருத்த மாநாட்டில்
எம். ஜி. ராமச்சந்திரன்

தந்திரக்காரர்கள் தவிக்கின்றனர்!

"தந்திரக்காரர்களால், அமைக்கப்பட்ட இந்தச் சமுதாயம், உழைப்பவனைக் கீழ்மகனாகவும், ஊரை ஏய்த்து வாழ்பவனை உயர் ஜாதிக்காரனாகவும் ஆக்கி, கோர விளையாட்டு நடத்திக்கொண்டிருக்கிறது!"

"இந்த கோணமை மிக்க சமுதாய அமைப்பு மாறினால், தாங்கள் வாழும் உயர் நிலை தரைமட்டமாகுமே; ஏமாற்றத்தில் அமிழ்ந்து கிடக்கும் மக்கள் விழித்துக் கொள்வார்களே, என்று, தந்திரக்காரர்கள், அதை அப்படியே பாதுகாக்க, எந்த முறையைக் கொண்டாவது முயற்சிக்கிறார்கள்!"

—காஞ்சிபுரம் சமுதாய சீர்திருத்த மாநாட்டில்
எம். ஜி. ராமச்சந்திரன்

கண்கொள்ளாக் காட்சி!

பல்லவர் தலைநகரில் — பகுத்தறிவாளர்கள் கூடினர்

சி. வி. எம். அண்ணாமலை வரவேற்றார்

திராவிடரின் வாழ்வுக்குத் திட்டமிட வேண்டுகோள்

புதுவாழ்வு அமைக்க புரட்சி நடிகர் ராமச்சந்திரன் அழைப்பு

நகைச்சுவை அரசரின் தலைமையுரை

(டிரங்க் செய்தி)

காஞ்சிபுரம், ஆக. 21—

இன்று காலை 9 மணிக்கு காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் அமைந்துள்ள மாபெரும் பந்தலில், செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநாடு ஆரம்பமாயிற்று.

காலை 9 மணிக்கே பல்லாயிரக்கணக்கில் கழகத் தோழர்களும், தாய்மார்களும் மாநாட்டுப் பந்தலில் கூடியிருந்தனர். மாநாட்டுப் பந்தலும், மேடையும் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மேடையில் பொதுச் செயலாளர் அண்ணா, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், ஈ.வெ.கி. சம்பத், சி. பி. சிற்றரசு, இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். மணி, என். எஸ். இளங்கோ, கண்ணதாசன், என். வி. நடராசன், டி. கே. தாமரைச்செல்வன், க. அன்பழகன், ப. உ. சண்முகம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, அ. பொன்னம்பலனார், மு. கருணாநிதி, தில்லை-வில்லாளன், க. அம்மாதுரை, ஜி. பாலாங்குசம், தர்மலிங்கம், முத்து, அரங்கண்ணல், விருத்தாசலம் முனுசாமி, உடுமலை நாராயண கவி, அனிபா, வீராசன், ஈழத்து அடிகள், வி. எம். ஜான், அருள்மொழி, பூங்கோதை, கண்ணபிரான், கண்ணன் டாக்கீஸ் உரிமையாளர் பாலகிருஷ்ணன், சென்னை ராமசாமி, மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் பலர் அமர்ந்திருந்தனர்.

மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள், மாநாட்டிற்கு வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்று, சமுதாய சீர்திருத்த மாநாட்டினைத் திறந்து வைக்குமாறு புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் சமூக சீர்திருத்த மாநாட்டினைத் திறந்து வைத்து, தி. மு. கழகம், சமுதாயத் துறையில் ஆற்றிவரும் பணியின் அவசியம் குறித்து சிறந்ததோர் சொற்பொழிவாற்றினார்.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத்தின் இரண்டாவது சமூக சீர்திருத்த மாநாட்டிற்கு தலைமை தாங்கி நடத்தித் தருமாறு, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களை வரவேற்புக்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 21-8-54 சனி

அவர் சொல்லே தவறியது!

"நம்முடைய வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், ஒரு நோத்திலே சுதந்திரமாக சிந்திக்கும் தன்மையையும், மனதுக்கு சரியென்று பட்டதை துணிந்து காரியமாற்றும் சக்தியையும், நாம் இழந்திருக்கிறோம்! இப்படி அயர்வு ஏற்பட்ட இந்த இடைக் காலத்தை நீக்கினால்தான் நம் பண்டைப் பெருமையைத் திரும்ப ஏற்படுத்த உண்மையில் உழைத்தவர்களாவோம்!"

என்று சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மணிவிழாவிலே பேசிய டாக்டர் அழகப்ப செட்டியார் கூறியிருக்கிறார்.

நம்முடைய பண்டைப் பெருமை என்னவென்பதை சிறிது விளக்கி, அது ஏதோ காரணத்தால் அழிந்துவிட்டது என்று கூறி, அதை திரும்ப கொண்டுவரப்பட என்ன செய்வது என்று அறிவுரை பகன்றிருக்கிறார் டாக்டர்.

மன்றில் படிக்க வேண்டிய மணிவிழா பிரசங்கம்!

தெளிவாகச் செல்கிறது; திடீரென்று மாய்கிறது; மிகக் குழப்பமாக முடிகிறது!

இந்திய உப கண்டத்தின் பண்டைப் பெருமை என்றால் என்ன?

வேத காலந்தொட்டு ஆரம்பிக்கிறார், டாக்டர். மேலைநாட்டு அறிஞர்கள், 'சமுதாயத்தோடு ஒன்றி வாழ்ந்தால்தான் மனிதனின் ஒழுக்கும், அறிவும் வளருகிறது,' என்றனர்; ஆனால், இந்திய ஞானிகளோ, 'பண்பட்ட மனிதன் காட்டிலே, வனாந்திரங்களிலே, தவ நிலையிலேதான் உண்டாகிறான்,' என்றனர்.

வேத காலத்திலே இயற்கைக்கும் பயந்த மனிதன், பின்னால் அடுத்த கட்டத்திலே கடவுளை உண்டாக்கினான்.

காட்டிற்குச் சென்ற ரிஷிகள், 'இறப்பைப் பற்றி கவலைப்படாதே; பிறப்பைப் பற்றி கவலைப்படு,' என்ற 'கர்மா' தத்துவத்தைக் கண்டு பிடித்தனர்.

'ஆண்டவன் தாளடி பணிந்து முக்தி அடைவது தான் மனிதனின் பிறந்ததின் பலன்,' என்ற தத்துவம் வளர்ந்தது! உலகம் மாயையாகியது!

இதை நம்பிய மக்கள், ஆண்டவனைத் தொழுவதையே கடமையென ஆரம்பித்தனர் உடனே பிராமணன் தோன்றினான்—அடுத்து பிராமணிய அதிகாரம் வளர்ந்தது!

உயர் ஜாதியின் அக்கிரமத்தை சகியாதவனின் மனதில் குமுறல் ஆரம்பித்தது! அதன் பிரதிபலிப்பே புத்தன்!

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள், 'புத்தம்' இந்திய உப கண்டத்தைத் தன் வயப்படுத்தியது!

ஆனால், புத்தர் கொள்கைகள் நாளடைவில் வலிவிழந்து, மக்களின் பக்தி மனப்பான்மையால் விஷ்ணுவில் மதமாகி, பின்னால் ஒரு காலத்தில், இந்து மதத்தோடு ஒன்றிப்போனது!

அடங்கிக் கிடந்த பிராமணியம் மறுபடியும் தழைத்தது!

பார்ப்பனர் ஆதிக்கம் புத்த மதத்தை அடியோடு ஒழித்தது!

கி. பி. எட்டாவது நூற்றாண்டில் சங்கரர் தோன்றினார். புத்த மதத்தினால் தளர்ந்து, பிராமணியத்தால் உருக்குலைந்து போயிருந்த இந்து மதத்தை சரி செய்து, மக்களை உண்மையான கடவுட் பாதையில் அழைத்துச் செலுத்துவதாக நாடு பூராவும் சுற்றி பிரசங்கங்கள் செய்தார்.

பலவகைப்பட்ட தத்துவங்கள் தோன்றின; எண்ணற்ற தத்துவ விளக்கங்கள் கூறப்பட்டன; இந்து மதம், முற்றிலும் வெவ்வேறான சிறு சிறு வகுப்புகளாக மாறியது!

கி. பி. பத்து—பதினோராவது நூற்றாண்டில் இந்த உப கண்டத்தில் காலடி வைத்த எவனும் ஜாதி பேதமும், அறிவு சூன்யமும், குருட்டு மத பக்தியும் கொண்ட மக்களைத்தான் இங்கே பார்த்திருக்க முடியும். தாங்கள் வாழும் நகரைத் தாண்டினால் கடலா, பூமியா என்று தெரிந்து கொள்ளாமல் கூட, போகிற கதிக்கும் புண்ணியம் தேடிய மக்கள்தான் இங்கு வசித்தனர்!

இந்தக் கட்டத்தை எடுத்துக் காட்டித்தான் டாக்டர் கூறுகிறார்—'இந்த நேரத்திலேதான் நம் மக்கள் சுயமாக சிந்திக்கும் தன்மையை இழந்துவிட்டனர்"—என்று!

நம் மக்களின் சிந்திக்கும் மனப்பான்மை, எதையும் தொகுத்து, பகுத்துப் பார்க்கும் எண்ணம் ஏன் போயிற்று?

இதற்கும் பதில் என்ன காரணத்தாலோ டாக்டர் கூறவில்லை.

பல்கலைக் கழகத்திலே வரலாறு உட்பட பல கலைகளையும் பயின்று பட்டம் பெற்ற மாணவர்கள் இதற்குள்ள காரணத்தை நிச்சயம் சிந்திக்க வேண்டும், அப்பொழுதுதான் டாக்டரின் சொற்பொழிவால் அவர்கள் பயன்பெற முடியும்.

தொடர்ந்தாற்போல, என்னைப் போர் படைகளிவந்த மக்கள், ஏன், எண்ணுவதையே விட்டு விட்டனர்?

11-வது நூற்றாண்டில் இந்தியா வந்த அல்பூரினி என்ற அரபிய எழுத்தாளன் எழுதி வைத்திருப்பதுபோல, "தங்கள் நாட்டைத் தவிர்ந்து வேறு நாடில்லை, மன்னரில்லை, மதமில்லை, விஞ்ஞானமில்லை" என்ற எண்ணத்துடன் — முட்டாள்தனமாகவும், மந்தமாகவும் தாங்கள் இருக்கும் நிலையே உயர்ந்தது என்ற கர்வத்துடனும் அன்று மக்கள் இருந்ததற்குக் காரணம் என்ன?

டாக்டரின் சொற்பொழிவிலே இதற்கும் பதிலில்லை; ஆனால், இந்த முட்டாள்தனமான, மந்தமான, கர்வமான நிலை இன்னும் நீடிக்கிறது என்பதையும், அதைப் போக்க வேண்டுமென்றும் டாக்டர் அறிவுரை புகன்றிருக்கிறார்!

டாக்டரின் வேண்டுகோளின்படி நடக்க மாணவர்கள் மாத்திரமல்ல, நாட்டு மக்களே இன்று அதைத்தான் விரும்புகின்றனர்!

ஆனால், வியாதிக்குக் காரணமும், வியாதியின் தன்மையும் தெரியாமல் எப்படி மருந்து கொடுப்பது?

இந்திய உப கண்டத்திலே ஏற்பட்ட மந்த நிலைக்குக் காரணம், 11-வது நூற்றாண்டிலே ஏற்பட்ட திடீர் தாக்குதல் என்று கூற, வரலாற்றில் ஒன்றும் இடையாதே!

விரிவாக ஆராய்ச்சி செய்தால் இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்த சுய சிந்தனையை ஒழிக்கும் வேலை ஆரம்பித்துவிட்டது என்பது தானே தெரிகிறது!

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன், ஆரியர் வருகைக்கு முன்பே, மொகஞ்சதாரோ—ஹாரப்பா நாகரீகம் தழைத்திருக்கிறது, இந்திய உப கண்டத்தில்!

ஆனால், வேத காலம் ஏற்பட்ட பின்னர், இந்த நாகரீகம் குறைந்துவிட்டது. வேத கோட்பாடுகள் பரவி, மக்கள் சிந்தித்துச் செயலாற்றுவதை விட்டு, போகிற கதிக்கும் புண்ணியம் தேடி, பிராமணீய அடிமைகளாகிவிட்டனர்!

இதைக் கண்டு விழிப்புற்ற ஒருவரின் பிரதிநிதிதான் புத்தர்!

புத்தரின் பொன் மொழிகள் மேலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மனிதனை சுயமாக சிந்திக்க வைத்தது!

அதற்கு நேர்மாறாக, ஆரிய பலமாக, மறுபடியும் அந்த இடத்தைக் கைப்பற்றியது வேத முறை! அதன் பிறகு மக்கள் இன்னும் விழிப்புறவில்லை!

வேத முறைப்படி, பார்ப்பனீயம் எப்படி அவ்வளவு மக்களையும் பயப்படுத்தியது என்பதை, சுலபமாக அறிந்து கொள்ளக்கூடிய விஷயமன்று!

வேத முறைப்படி ஏற்படுத்தப்பட்ட ஜாதி முறை, பிராமணரைத் தவிர வேறு யாரையும் அறிவு பாதையை நெருங்கக்கூட மறுத்தது!

இரண்டாவது, மக்கள் வேத கலாசாரத்திலே நம்பிக்கையுடைய 'எல்லாம் நம் கர்மவினை!' என்ற தத்துவம் அவன் இடம் பேசாதபடி சாகடித்துவிட்டது!

மனிதனுக்குத் தன்னம்பிக்கையைப் போக்கடித்த பின், அவனுடைய இன்ப துன்பங்களுக்கெல்லாம் மிகுந்த காரணம் கூறியான பின், அவனுக்கு சுயமாகச் சிந்திக்கும் தன்மை எங்கிருந்து வரும்?

இந்த வேத முறையின் முழு வெற்றி 8—9-வது நூற்றாண்டிலே இந்திய உப கண்டத்திலே ஏற்பட்டுவிட்டது.

அப்போதுதான், இந்திய உப கண்டம், வந்த படையாளிகளிடமெல்லாம் அடங்கியது! விஞ்ஞான உணர்வே இன்றி வாழ்ந்தது! அறிவு வளர்ச்சி ஏற்படவேயில்லை!

வெள்ளைக்காரன் வரும் வரை, 'சூரியனையும் சந்திரனையும் பாம்பு விழுங்குகிறது' என்றுதான் நம்பிக்கொண்டிருந்தது!

'மதம் மக்களை சாய்த்தது,' என்ற, இந்த உண்மையை நம் மாணவர்கள் கொஞ்சம் சிந்தித்தாலே உணர்ந்து கொள்ள முடியும்!

இந்த உண்மையைக் கூறி விட்டாலும், டாக்டரின் சொற்பொழிவைக் கேட்ட அறிவுத் திறன் படைத்த மாணவர்கள் உணருவர்; உணர்ந்தவர், மதத்திற்கு மரியாதை செலுத்தமாட்டார்கள் என்பதும் உறுதி!

ஆயிரக்கணக்கான கேள்விகள்

புதுடில்லி, ஆக. 21—

பக்கிங் சபை நடைமுறை பற்றியும், விவாதத்திற்கான நிகழ்ச்சிகள் பற்றியும் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்ட ஒரு வார காலத்திலேயே ஆயிரக்கணக்கான கேள்விகள் குவிந்து விட்டனவாம்!

முப்பது நாட்கள் நடைபெற இருக்கும் மக்கள் சபைக் கூட்டத்தில், முதல் ஆறு நாட்களில் பதிலளிப்பதற்காக, 4,250 கேள்விகள் வந்துள்ளனவாம்!

இதுவரை வந்துள்ள கேள்விகள் சராசரியாக நாள் ஒன்றுக்கு 800 வீதம் பதிலளிக்கப்பட வேண்டியவையாயிருக்குமாம்!

செப்டம்பர் 18-ந் தேதி வரை கேள்வி எழுப்ப தவணை இருப்பதால் இன்னும் எத்தனையோ ஆயிரம் கேள்விகள் எதிர்பார்க்கப்படுகின்றனவாம்!

இத்தாலிய சர்க்காரை ஏமாற்றிய மூடவர்கள்!

215 பேர் கைது!

நேப்பிள்ஸ், ஆக. 19—

இங்குள்ள 215 முடவர்களையும் இன்னபிற அங்கவீனர்களையும் போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்த முடவர்கள், தாங்கள் எல்லாம் யுத்தத்தின்போது அங்கங்களை இழந்துவிட்டதாக சர்க்காரை ஏமாற்றி, இருபத்தைந்து லட்சக்கணக்கான இத்தாலிய ரூபாய்களை 'பென்ஷன்'களாக பெற்றுக்கொண்டு வந்தனராம்!

நான்கு பேர்கள் சேர்ந்து இந்த முடவர்களை எல்லாம் ஒன்று கூட்டி, அவர்களுக்குத் தேவையான 'டாக்டர் சர்ட்டிபிகேட்'களையும் இராணுவ 'ரிகார்டு'களையும் தயாரித்துக் கொடுத்து, அவர்கள் பெற்றுவந்த 'பென்ஷன்' தொகையில் மூன்றில் ஒரு பங்கு சதவிகிதம் லஞ்சமாக வாங்கிக் கொண்டனராம்!

இந்த நான்கு பேர்வழிகளையும் போலீசார் கைது செய்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராணுவ 'உதவி'

"தாய்லாந்து நாட்டின் பாதுகாப்பிற்கு அமெரிக்க ராணுவங்களை அனுப்பி, உதவத் தயாராயிருக்கிறோம்" என்ற அமெரிக்க 'உதவி'யை தாய்லந்து நிராகரித்து விட்டதாக, அரசாங்க அதிகாரி ஒருவர் மக்கள் சபையில் குறிப்பிட்டதாக 'பாங்காக் போஸ்ட்' என்ற இதழ் குறிப்பிட்டுள்ளதைத் தெரிய வருகிறது.

சீனாவின் 'மன்னிப்பு'

முன்னாள் ஜப்பான் இராணுவத்தைச் சேர்ந்தவர்களும், பல யுத்த குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டு சீனாவில் இருப்பவர்களுமான 417 ஜப்பானியர்களை சீனா மன்னித்து விட்டதாக, சீன செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

நியூ கினியா

இந்தோனேஷியருக்குச் சொந்தமல்லவாம்!

டச்சு அரசாங்க அறிக்கை!

ஹேக், ஆக. 19—

"டச்சு நியூ கினியா மீது சொந்தம் கொண்டாட இந்தோனேஷியாவிற்கு எவ்வித உரிமையும் இல்லை;

"இனம், மொழி, மதம், பண்பாடு இவற்றில் எந்த வகையாலும், டச்சு நியூ கினியா மக்களும் இந்தோனேஷிய மக்களும் ஒன்றுபட்டவர்கள் அல்ல;

"நியூ பவுன்லாந்து அல்லது கனரி தீவு இவற்றில் எப்படி இந்தோனேஷியருக்கு உரிமையிருக்க முடியாதோ அப்படித்தான் நியூகினியாவிலும் இந்தோனேஷியருக்கு உரிமை இருக்க முடியாது"

இவ்வாறு, இந்தோனேஷியா, ஐ. நா. பொதுச் சபைக்கு, டச்சு நியூகினியாவை இந்தோனேஷியாவுடன் சேர்த்துத் தர வேண்டுமெனக் கோரி மனுச் செய்துள்ளதை எதிர்த்து, டச்சு அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

அசாமில் எண்ணெய்க் கிணறு

இந்திய சர்க்கார் முயற்சி

புதிய எண்ணெய் கிணறுகளைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்திருக்கும் இந்திய சர்க்கார் இந்த ஆண்டு இறுதிக்குள் அசாமில் புதிய எண்ணெய்க் கிணறு ஒன்று தோண்ட முடிவு செய்திருக்கிறது என்று தெரிகிறது.

பிரமபுத்திரா பள்ளத்தாக்கில், அசாம் எண்ணெய்க் கம்பெனியார் மூன்று எண்ணெய்க் கிணறுகளை ஏற்கனவே தோண்டியிருக்கிறார்கள். அதே இடத்தில் இந்திய சர்க்கார் தங்கள் கருத்தைச் செலுத்த இருக்கின்றனர்.

அஸ்ஸாம், ஜெய்சல்மீர், சௌராஷ்டிராவில் உள்ள இடங்களில் சர்வே செய்வார்கள் என்று தெரிகிறது.

அப்ரகம் ஏற்றுமதி வரி ரத்து!

இந்திய அரசாங்கம், அப்ரக மூலப் பொருளின் மீது விதிக்கப்படும் ஏற்றுமதி வரியை ரத்து செய்து உத்திரவு பிறப்பித்துள்ளது.

இதுபற்றிய அதிகார பூர்வமான அறிக்கை கூறுவதாவது:-

"வேறு பல காரணங்களுடன், ஏற்றுமதி வரி விதிப்பினால் அப்ரகம் ஏற்றுமதி வெகுவாக பாதிக்கப்பட்டிருப்பதாக சர்க்காருக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. வழக்கம் போன்று, சர்க்கார், நிலைமையை ஆராய்ந்துவிட்டு உடனடியாக ஏற்றுமதி வரி விதிப்பை ரத்து செய்வது என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இதற்குக் காரணம் சுதேச மார்க்கெட்டுகளின் போட்டியைச் சமாளிக்கவேண்டியிருப்பதேயாகும்."

5000 டன் உரம்

அமெரிக்காவிடமிருந்து இந்தியா வாங்குகிறது

பம்பாய், ஆக. 19—

அமெரிக்காவிடமிருந்து 'யூரியா' என்ற நைட்ரஜன் சத்துள்ள உரம், 5000 டன்கள் இந்தியா வாங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பார்மோசா பாதுகாப்பு

சீனா மீது படையெடுப்பு அல்லவாம்!

பார்மோசாவைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் அமெரிக்க ஏழாவது கப்பற்படையின் தளபதி அட்மிரல் பெலிக்ஸ் ஸ்டம்ப் என்பவர், "ஐசனோவர் அறிவித்துள்ளபடி செஞ்சீனா பார்மோசாவைத் தாக்குவதினின்றும் தனது ஏழாவது கப்பற்படை பாதுகாக்கும்," என்று கூறினார்.

மேலும் அவர், சியாங்கிடமிருக்கும் தாசென் தீவைப் பாதுகாக்கும் வேலையைத் தாங்கள் மேற்கொள்ள இயலாதென்றும், அந்தத் தீவிற்கு தானும், இதர அதிகாரிகளும் கடந்த செவ்வாயன்று போயிருந்ததாகவும் கூறினார்.

"பார்மோசா பாதுகாப்பு என்பது செஞ்சீனப் பகுதியை அமெரிக்கா தாக்கும் என்பதல்ல," என்றும் குறிப்பிட்டார்.

அவர், சியாங்கே ஷேக்குடன் ரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

★

பார்மோசா 'விடுதலையும்' 'பாதுகாப்பும்'

பிரிட்டன் கருத்து!

லண்டன், ஆக. 18—

"மக்கள் சீனப் பிரதேசங்களை சியாங்கே-ஷேக் தாக்குவதற்கு அனுமதிப்பதுடன்: சியாங்கிற்கு பாதுகாப்புத் தந்து வருகின்றனர், அமெரிக்கர்கள்!

சீன மக்கள் இதை எதிர்த்தால் மூன்றாவது உலக யுத்தம் மூளுவது சாத்தியமே!

தென் கிழக்கு ஆசிய பாதுகாப்பு அமைப்பில் நிச்சயமாக பார்மோசா சேர்க்கப்படாது என்பது பற்றிக் கடந்த நாட்களில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது-

பார்மோசாவைத் தாக்குமுன் அமெரிக்க ஏழாவது கடற்படையின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டுமென்று கூறிய அமெரிக்க ஜனாதிபதியின் கூற்று பற்றியோ, பார்மோசா பாதுகாப்பு பற்றியோ நமக்கு எவ்வித தொடர்பும் கிடையாது"

இவ்வாறு பிரிட்டிஷ் வெளிவிவகார இலாகா கருத்தறிவித்தது.

பார்மோசா விஷயத்தில் அமெரிக்கத் தலையீடு பற்றி பிரிட்டனுக்கு மிகுந்த அதிருப்தியும், வேதனையும் இருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

காசிம் ரஜ்வி 'சிறை மாற்றம்!

ரஜாக்கர் தலைவரான, காசிம் ரஜ்வி, மருத்துவரின் ஆலோசனையின் பேரில், ஐதராபாத் சிறையிலிருந்து பம்பாய் மாநிலத்திலிருக்கும் யெரவாடா சிறைக்கு சென்ற மாதத் துவக்கத்தில் மாற்றப்பட்டிருப்பதாக சட்டசபையில் உதவி போலீஸ் மந்திரி அறிவித்தார்.

'நேரடி நடவடிக்கை'யில் 600 பேர் கைது!

ஆந்திர மாநிலத்தில் மதுவிலக்கை ரத்து செய்யக் கோரி கம்யூனிஸ்டுகள் நடத்திவரும் 'நேரடி நடவடிக்கை'யில் 5-வது நாள் போராட்டம் வரையில் சுமார் 600 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் அரசாங்கம், பல பிரிவினரையுள்ள பட்டாணிய குல மக்களிடையே, வெள்ளையரைப் போன்றே தொடர்ந்து பிளவுகளை உண்டுபண்ணிக் கொண்டிருப்பதாக கான் அப்துல் கபார் கான் குற்றம் சாட்டினார்.

தாயகம் திரும்பும் தமிழர்கள்

'மித்திரன்' எச்சரிக்கை!

"இப்போது இலங்கையிலிருந்து திரும்பும் நமது சகோதரர்களுக்கு கூடிய வரை கஷ்டமின்றி புனர் வாழ்வு அளிக்க என்ன வழி என்பதிலேயே நாம் முழு கவனமும் செலுத்த வேண்டும். இது, முக்கியமாக, சென்னை இராஜ்யத்தைப் பற்றிய ஒரு பிரச்சினையே! இலங்கையிலிருந்து இங்கு திரும்பும் இந்தியர் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லையென்று நமது முதன் மந்திரி கூறியிருப்பது ஒரு விதத்தில் நமக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதுதான்; ஆனால், அவ்விந்தியரின் எண்ணிக்கை வரவரப் பன்மடங்காக அதிகரிக்கும் நிலையில் அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் பிரச்சினையை இந்த இராஜ்ய அதிகாரிகள் தனித்து சமாளிக்க முடியுமா என்பது சிந்திக்க வேண்டிய விஷயம்......எப்படியும் இலங்கையிலிருந்து இங்கு திரும்பும் இந்தியருக்குப் புனர் வாழ்வு அளிப்பதில் இந்த இராஜ்ய சர்க்காருக்கு மத்திய சர்க்கார் உருவான உதவி அளிப்பது அவசியம் ....இது 5,000 பேருடன் தீர்ந்துபோய்விடக் கூடிய ஒரு பிரச்சினை அல்ல! மேலும் இங்கு வருவோர் மறுபடியும் அத்தீவுக்குத் திரும்பக்கூடியவர்களு மன்று! அவ்வளவு பேரும் இங்கு இனி நிரந்தரமாக வாழ வழி செய்தாக வேண்டும். பாகிஸ்தானிலிருந்து அகதிகள் வெளியேறியதைப்போன்ற ஒரு பிரச்சினை அல்ல இது; எனினும், இதிலும், முன் யோசனையுடன் ஏற்பாடான முறையில் இப்பிரச்சினையைச் சமாளிக்க நம் இராஜ்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்வது அறிவுடைமையாகும்,"

இவ்வாறு, சென்னை தினசரியான 'சுதேசமித்திரன்' தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழர்கள் பற்றி தனது 19-ம் தேதிய இதழ் தலையங்கத்தில் எழுதியுள்ளது.

சம்பத் படிப்பக திறப்பு விழா பொதுக் கூட்டம்

இடையக்கோட்டை தி. மு. கழக ஆதரவில், 17—8—54ல், சம்பத் படிப்பகத் திறப்பு விழாவும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர் சி பி சிற்றரசு படிப்பகத்தைத் திறந்து வைத்தார். அன்று மாலை தோழர் கே. மா. பதி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நல் வீராசன், பழனி, சாம்பசிவநேசம், பி சமதர்மம், மு. பன்னீர்செல்வன் ஆகியோர் பேசிய பின், தோழர் சி பி. சிற்றரசு அவர்கள் புராணங்கள், கோயில்கள் பற்றி விளக்க உரை ஆற்றினர்.

கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவு கழகம்

சென்னை, ஆல்தோட்டம், 37-வது வட்ட கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுக் கழக சார்பில், ஜூலை 15 காலை 9 மணிக்கு ஊர்வலமும், மாலை கழகக் கட்டிடத்தில், கூட்டமும் தோழர் தி. கோ. அரசு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ராமமூர்த்தி, ரா. ஜான், அருள்தாஸ் ஆகியோர் மும்முனை போராட்டங்கள் குறித்துப்பேசினர்.

தூத்துக்குடி சதி வழக்கு

சாட்சிகள் விசாரணை ஆரம்பம்

திருநெல்வேலி, ஆக. 16—

நெல்லை அடிஷனல் செஷன்ஸ் கோர்ட் நீதிபதி திரு. ராதாகிருஷ்ண முதலியார் முன்னிலையில் இன்று தூத்துக்குடி சதி வழக்கின் சாட்சிகள் விசாரணை ஆரம்பமாயிற்று.

முதன் முதலாக கவிஞர் பண்ணையார் சர்க்கார் தரப்பில் விசாரிக்கப்பட்டார். சர்க்கார் வக்கீல் பி. எஸ். சுப்பிரமணிய பிள்ளையின் கேள்விகளுக்கு, அவர் சாட்சியமளித்தவுடன், எதிர் தரப்பு வழக்கறிஞர் கம் நெல்லையப்ப பிள்ளையால் முதலில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அப்பொழுது சாட்சி கூறியதாவது:—

"நான் 5 ஆண்டு காலமாக புதுக் கிராமம் கோவாப்ரேடிவ் ஸ்டோரில் வேலை பார்த்தேன்; தற்சமயம் வேலை இல்லை; அரிசி வியாபாரம் செய்கிறேன்; அப்படி வியாபாரம்செய்வதற்கு எனக்கு லைசென்ஸும் கிடையாது; நான் தி. க. அனுதாபியாதலால், காகம்மாள் வாசகசாலைக்குப் போவேன்; நான் காங்கிரஸ் கட்சியிலும் விரோதம் தெரிந்தகாலம் முதல் அனுதாபி; காங்கிரசும்—தி. மு. கழகமும் எதிர்க் கட்சிகள்.

முதல் எதிரி உப்பு தொழிலாளர் தலைவர்; இரண்டாவது எதிரி வியாபாரி; மூன்றாவது எதிரி முனிசிபல் கவுன்சிலர்; நான்காவது எதிரியைப் பற்றி எனக்குத் தெரியாது; ஐந்தாவது எதிரி முனிசிபல் கவுன்சிலர் என்று எனக்குத் தெரியும்.

தி. க., தி. மு. க. என்று இரண்டு கட்சிகள் இருக்கின்றன; தி. க., தி. மு. க-வுக்கு யார் யார் நிர்வாகிகள், அவர்கள் ஆபீஸ் எங்கே இருக்கிறது என்ற விபரங்கள் தெரியாது; 5-வது எதிரி தி. மு. க. காரியதரிசி; பொருளாளர் யார் என்று தெரியாது.

காகம்மாள் வாசகசாலைக்கு சென்ற நாளின் தமிழ், மாதம், தினம் எனக்குத் தெரியாது; ஆடித்தவசுக்கு முன்பா அல்லது பின்பா அந்தச் சம்பவம் நடந்தது என்றும் தெரியாது.

அந்தச் சம்பவத்துக்கு முன்போ, அல்லது பின்போ, நான் அந்த வாசகசாலைக்கு சென்றது கிடையாது.

வாசகசாலை ஒரு காம்பவுண்டுக்குள் இருக்கிறது; அங்கே எத்தனை வீடுகள் இருக்கின்றன வென்று எனக்குத் தெரியாது; வாசகசாலைக்கு 50, 60 கெஜ தூரத்தில் போலீஸ் பீட் இருக்கிறது.

நான் வாசகசாலைக்குள் செல்லவில்லை; ஏணிப்படியில் நின்றேன்; 15 நிமிடம் எட்டிப் பார்த்தேன்; வாசகசாலை ஒரே ஹால்; மொட்டை மாடி.

கீழ் கோர்ட்டில் வாசகசாலை ஓடு போட்டது; தட்டடி போட்டதா வென்று தனக்குத் தெரியாது என்று கூறியதாக சாட்சி ஒப்புக்கொண்டார். வாசகசாலை மின்சார விளக்கு உள்ளதா இல்லையா என்பது தனக்குத் தெரியாதென்று கீழ்க் கோர்ட்டில் கூறியதாகவும் சாட்சி சொன்னார்."

மேலும் குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:—

"வாசகசாலைக்கு உள்ளே இருந்தவர்கள் பாயில் இருந்தார்களா, சமுக்காளத்தில் இருந்தார்களா என்பதை நான் கவனிக்கவில்லை; 10 பேர் ஏணிப்படியிலும் 10 பேர் படிக்கும் கீழும் நின்று கொண்டிருந்தார்கள்; நின்று கொண்டிருந்தவர்களின் அடையாளம் எனக்குத் தெரியாது; உள்ளே செல்கையில் என்னை யாரும் தடுக்கவில்லை; கதவு பூட்டப்படவில்லை; நான் நின்ற இடத்திலிருந்தே பேசுவதைக் கேட்கலாம்; அந்தக் கூட்டத்திற்கு யார் தலைமை வகித்தார்களென்று என்னால் கூறமுடியாது; நான் போலீசில் (சி ஐ) 1, 5-வது எதிரிகள்தான திட்டத்தை கொண்டுவந்தார்களென்று கூறினேன்; ரயிலை நிறுத்துவது பெரிய குற்றமென்று எனக்குத் தெரியும்; நான் பார்த்த விஷயங்களை யாரிடமும் சொல்லவில்லை

என்னுடைய வீட்டுக்கு புதுகிராமம் வழியாகவும், மார்கெட் வழியாகவும் போகலாம்; அன்று இரவு 9½ மணி முதல் 10½ மணி வரை நான் யாரிடமும் பேசவில்லை; சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்த 10 நாட்களுக்குப் பிறகு என்னை அடையாளம் காட்டும் பரீட்சைக்கு அழைத்துக்கொண்டு போனார்கள்; சங்கரநாராயணனை 4 அல்லது 5-ஆண்டு முன்னாலே தெரியும்; நான் அவரை அடிக்கடி பார்த்திருக்கிறேன்; பேசவில்லை."

பிறகு சாட்சியை எதிர்தரப்பு வழக்கறிஞர் பி. எ. தங்கசாமி நாடார் குறுக்கு விசாரணை செய்தார். சாட்சி கூறியதாவது:—

"வாசகசாலையில் போர்டு இருந்ததை நான் கவனிக்கவில்லை; 'இலவச வாசகசாலை' என்பதில் 'இலவச' என்ற வார்த்தைகள் அழிந்திருந்தன.

வாசகசாலையில் கூட்டம் நடக்கப்போவதாக, முனிசிபல் ஆபீஸ் முன்னால் யார் கூறினார்களென்று எனக்குத் தெரியாது; நான் தி மு க. கூட்டங்களுக்கே சென்றதே கிடையாது; 1 முதல் 5-எதிரிகளைத் தவிர அங்கே இருந்தவர்கள் ஒருவரும் எனக்குத் தெரியாது; கோதண்டராமனும், வெங்கடசாமி நாயுடுவும் எப்பொழுது வந்தார்களென எனக்குத் தெரியாது; அவர்களும் உள்ளே போகவில்லை; அங்கே பேசியவைகள் எனக்குப் பிடிக்காததினால் வெளியே வந்தேன்; அந்த விஷயத்தை பக்கத்திலிருந்த போலீசிடம் நான் சொல்லவில்லை; அங்கே தொண்டர்கள் இருந்தார்களா என்பது எனக்குத் தெரியாது."

பிறகு தோழர் இரா. இளம்வழுதி (வக்கீல் ஆர். தண்டபாணி) சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார். அதற்கு சாட்சி கூறியதாவது:—

"எனக்கு தி. க., தி. மு. க. கொள்கைகள் தெரியாது; தி. க. தலைவர் பெரியார்; தி. மு. க. தலைவர் அண்ணாதுரை.

ரயில் நிறுத்தப் போராட்டம் ராஜாஜியின் ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்த்து நடந்தது.

என்னை, காலை 11 மணிக்கு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசாரித்தார். நான வாசகசாலை மேற்படியில் நின்றேன்; கோதண்டராமனும், வெங்கடசாமி நாயுடுவும் கீழ்ப்படியில் நின்றனர்;

நான் அந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்படவில்லை; அந்தக் கூட்டத்தில் யாரும் எதிர்த்துப் பேசவில்லை; நான் அங்கே போகும்பொழுது கே. வி. கே. சாமியும், ரத்தினமும் ஏகாந்தத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள்; சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரிக்கும்பொழுது கோதண்டராமன் அங்கு இல்லை; போலீசார் மட்டும் இருந்தனர்; ராமகிருஷ்ண ஐயர் காரை உடைத்ததாக நான் சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் கூறியதாக ஞாபகம் இல்லை; இம்பீரியல் பாங்க் கேஷியர் வீட்டை கூட்டம் தாக்கியதாக நான் சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் கூறியதாக ஞாபகம் இல்லை; நான் இப்பொழுது கதர் அணிந்திருக்கிறேன்; நான் காங்கிரஸ்காரன் என்பதாலும், பிராமணர்கள் [illegible] நான் பொய்சாட்சி கூறுகிறேன் என்பது உண்மையல்ல."

இரண்டாவது சாட்சி, வெங்கடசாமி நாயுடு, சர்க்கார் தரப்பு 'சார்பாக' விசாரிக்கப்பட்டார். அப்பொழுது அவர் கூறியதாவது:—

"நான் புதுக் கிராமத்தில் வசிக்கிறேன்; கொத்தனார் வேலை; தனக்கு எந்தக் கட்சியும் தெரியாது; ஆனால், நான் தி. மு. க. அனுதாபி; முனிசிபல் ஆபீஸ் முன்னால் ஆச்சாரியார் கல்வித் திட்டத்தை எதிர்க்க கூட்டம் நடக்கப் போவதாக சிலர் பேசினார்கள்; அதைக் கேட்டு நான் 8 மணிக்கு வாசகசாலைக்குப் போனேன்; வாசகசாலைக்குக் கீழே ரயில் நிறுத்தத்துக்கு தொண்டர்கள் சேர்ப்பதாக சிலர் பேசினார்கள்; மாடிக்குப் போனேன்; அங்கே முதல் எதிரி, ரயிலை நிறுத்தவேண்டுமென்றும், பாலத்துக்கு தீ வைக்க வேண்டும் என்றும், போலீசார் துன்புறுத்தினால் பிராமணர்கள் வீட்டில் கொள்ளையடிக்க வேண்டுமென்றும் கூறினார்; அதை மற்றவர்கள் ஆமோதித்தார்கள்; 1-லிருந்து 5 எதிரிகளைத் தெரியும்; மற்றவர்களைத் தெரியாது; சம்பவத்துக்குப் பிறகு, ஒரு வாரத்துக்குப் பின்னால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசாரித்தார்."

3-வது பிராசிக்யூஷன் சாட்சியாக கோதண்டராம பண்ணையார் விசாரிக்கப்பட்டார்.

இத்துடன் முதல் நாள் விசாரணை முடிந்தது.

கோர்ட் ஆரம்பத்தில், எதிரிகள் சார்பாக வழக்கறிஞர்கள் பி. எ. தங்கசாமி நாடாரும், இரா. இளம்வழுதியும் ஒரு ஆட்சேபணை மனு தாக்கல் செய்தார்கள். அதைப்பற்றி பிறகு கூறுவதாக கோர்ட்டார் கூறினர்.

எதிரிகளுக்காக, வழக்கறிஞர்கள் பி. எ. தங்கசாமி, நெல்லையப்ப பிள்ளை, தண்டபாணி, சிதம்பரம், கன்னையா நாடார், ராஜுசிங் ஆகியோர் ஆஜராகி இருந்தார்கள்.

★

இரண்டாம் நாள் விசாரணை

17—8—54 அன்று சாட்சி வெங்கடசாமி நாயுடுவை முதலில் வழக்கறிஞர் பி. எ. தங்கசாமி நாடார் விசாரித்தார். அப்பொழுது சாட்சி கூறியதாவது:—

"நான், இம்பீரியல் பாங்க் கேஷியர் காம்பவுண்டில் குடியிருக்கிறேன்; வாடகை கொடுக்கிறேன்; வாடகை ரசீது, கீழ்க் கோர்ட்டிலும் நான் காட்டவில்லை; இப்பொழுதும் என்னிடம் வாடகை ரசீது இல்லை.

கீழ்க்கோர்ட்டில், நான் சாட்சியம் கூறும்பொழுது, பிராமணர்களுக்கு வீடு கட்டவில்லை; எனக்குக் கொத்த வேலை.

14—7—53-ல், நான், கடைத்தெருவுக்குப் போனதற்கு எந்தக் காரணமும் கிடையாது; சம்பவத்துக்கு முன்னும் நான் காகம்மாள் வாசகசாலைக்குப் போயிருக்கிறேன்.

கீழ் கோர்ட்டில் நான் 5வது எதிரியை அடையாளம் காட்டவில்லை; தி. மு. கழகத்தின் எந்த ஜெனரல்பாடி—அல்லது—நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்துக்கும் நான் சென்றதில்லை; 1, 2-வது எதிரிகளை நான் பொதுக் கூட்டங்களில்தான் பார்த்திருக்கிறேன்; சம்பவத்துக்குப் பிறகு எதிரிகளை நான் கோர்ட்டில்தான் பார்த்திருக்கிறேன்; 2 வருடகாலமாக நான் தி. மு. கழக அனுதாபி; தி. மு. கழகத்திற்கு தூத்துக்குடியில் தலைவர் கிடையாது; தி. மு. கழகத்திற்கு யார் காரியதரிசி, பொருளாளர், நிர்வாகிகள் என்று தெரியாது; 14—7—53ல் எனக்கு வேலை கிடையாது; தி மு கழகத்திற்கு நான் பணம் கொடுத்தது கிடையாது; தி. மு. கழகத்திற்கு சந்தா எவ்வளவு என்று தெரியாது; உறுப்பினர்

(4-ம் பக்கம் பார்க்க)

எம். ஜி. ஆர். திறப்புரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய மாநாட்டில் பங்கு கொள்ளும் வாய்ப்பு கிடைத்ததை எண்ணி எண்ணி மகிழ்கிறேன்; என் வாழ்விலே ஒரு 'கோல்டன்' என்றே இதைக் கருதுகிறேன்.

சரித்திரப் புகழ்பெற்ற காஞ்சி, தமிழர்களின் வீரத்துக்கு விளக்கம் கூறும் இடம் காஞ்சி, தமிழகத்தின் விடிவெள்ளியாம் பெரியார் இராமசாமி அவர்கள். ஆதிக்கக்காரர்களின் கூடாரமாம் காங்கிரசை விட்டு வெளியேறிய இடம் காஞ்சி! இத்தகைய புகழ்மிக்க சரித்திரத்திலே ஏற்பட்டிருந்த காஞ்சியிலே மாநாடு! அந்த மாநாட்டிலே கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது என்பதை எண்ணி பூரிப்படைகிறேன்.

ஏறத்தாழ 18 ஆண்டுகட்கு முன்பு எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல், முரட்டு சுபாவமும், விளையாட்டுத் தனமும் நிறைந்த எனக்கு, 'தம்பி, இப்படியே வாழ்வதில் பலனில்லை; நீ 'மனித'னாக வேண்டும்; பகுத்தறிவுள்ள மனிதனாக வேண்டும்; பொது அறிவைப் பெறவேண்டும்; அத்தகைய பொது அறிவால்தான் மனிதன் முன்னேற முடியும்; அதற்கு நிறையப் படிக்க வேண்டும்; என்று இச்சமூக சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கியுள்ள கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் கூறி, படிப்பதற்காக ஒரு பத்திரிகையையும் கொடுத்து சிபாரிசு செய்தார்; அந்தப் பத்திரிகைதான், இன்று தமிழகத்தின் விடுதலை விளக்கினை ஏற்றி வைத்த அறிவுச் சுடர்—அணையா விளக்கு—பச்சை அட்டைக் 'குடியரசு!' அதற்குப் பிறகுதான் நான் பொது விவகாரங்களில் கவனம் செலுத்த ஆரம்பித்தேன்.

சமுதாயப் புரட்சியிலே, கலைஞர்களின் பங்கு எப்படி இருந்து வருகிறது என்பதற்கு, கலைவாணர் என். எஸ். கே. அவர்களின், திரைப்பட அனுபவத்திலிருந்து உங்கட்குச் சில சான்றுகளை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்—1937 என்று கருதுகிறேன்; அப்பொழுது வெளிவந்த 'இராமலிங்க சுவாமிகள்' என்ற படத்தில், யாரும் எதிர்பார்க்க முடியாதமுறையில்—திரைப்பட உலகமே புராண இதிகாசலட்சேபக் கூடங்களாக விளங்கிய நேரத்தில்—ஒரு ஜமீன்தாரின் மைத்துனராக வரும் என். எஸ். கே. அவர்கள், ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பு பெண்ணை பல எதிர்ப்புகளுக்கிடையில், தனது நகைச்சுவை நிறைந்த கேலி உரையாடல்களால், உண்மை உரத்தை உடைத்தெறிந்து, அவளை திருமணம் செய்து கொள்வது போல நடித்தே காட்டியிருக்கிறார், அந்தப் படத்தில் புகுத்தியுள்ளார்கள்; இத்தகையகளியுலகம் புரட்சிதான், இன்று, பகுத்தறிவுக்குக் கருத்துக்களுக்கு விரோதமான படங்கள், நாடகங்கள், நாட்டிலே செல்வாக்கிழந்தவையாகக் கருதப்படும் நிலைக்கு வளர்ந்து வந்துள்ளது!"

சமுதாய சீர்திருத்த கொள்கைகளான கலப்பு மணம், விதவா விவாகம், மூட நம்பிக்கை ஒழிப்பு, ஜாதி ஒழிப்பு போன்ற விஷயங்களை இன்று எதிர்ப்பவர்கள் தொகை மிகவும் குறைந்த அளவிற்கு வந்துவிட்டது; ஆனால், ஆதரிப்பவர்கள் தொகை வளர்ந்து விட்டதா என்றால், அதுவும் இல்லை!

உயர்ந்த வட்டாரங்களிலே உள்ளவர்கள், பெரிய பெரிய அரசியல் தலைவர்கள் எல்லோருமே, சமுதாய சீர்திருத்தங்களைப் பற்றி அடிக்கடி பேசுவதை ஒரு 'பாஷன்' (Fashion) ஆகக் கொண்டு விட்டார்களே தவிர, காரியத்தில் யாரும் செய்வதே இல்லை!

இதைப்பற்றி—அவர்களின் வைதிகப் பண்பைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள முடிகிறதே என்று திருப்திப்பட்டாலும், உலகத்தின் முன்னால், தாங்கள் பெரிய சீர்திருத்தவாதிகள் என்பதற்கு எடுத்துக்காட்டாக—தன் சொந்த நலனை முன்னிட்டோ என்னவோ — சிறு காரியங்களைச் செய்து காட்டிவிட்டு, அதற்குப் பின்னாலே, பலவிதமான பாதகங்களையும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

சில ஆண்டுகட்கு முன்னால், பிரபலப்படுத்தப்பட்ட, சில அரசியல் தலைவர்களின் கலப்புத் திருமணங்களுக்குப் பின்னால், அதை நடத்திவைத்த தலைவர்களே—அதற்கு முன்பும் சரி, இன்றுவரையும் சரி—வருணாசிரம தர்மத்தையும், குலப் பெருமையையும், மத நம்பிக்கையையும், மக்களிடம் வளர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, சமுதாயம் சீர்திருந்துவதற்கு முட்டுக்கட்டையான அவதிகளோடு 'அரசியல் நம்பமும், சட்ட அறிவும் கொண்டதாலேயே எதையும் சாதிக்கலாம், எவரையும் ஏமாற்றலாம்,' என்று எண்ணி, நாட்டிலே நடமாடும் சில பெருந் தலைவர்களின் ஏமாற்றுச் செயலை அம்பலப்படுத்தினால்தான் சமுதாய சீர்திருத்த இயக்கம் நாட்டிலே நல்ல பலனைப் பெற முடியும் என்று நம்புகிறேன்.

நாட்டிலே, அய்யரையும்—ஆச்சாரியையும், முதலியாரையும் — நாயுடுவையும் ஒருபுறம் தள்ளி விட்டு விட்டு, கலப்பு மணத்தையும், ஜாதி ஒழிப்பையும் பற்றி பேசுகிற இவர்களை எப்படி நம்ப முடியும்? ஒரு நாயுடு வீட்டு பிள்ளைக்கும் - முதலியார் வீட்டுப் பெண்ணுக்கும் திருமணம் நடைபெற்றால், அவர்களுக்குப் பிறகும் குழந்தைக்கு எந்த ஜாதி என்று குறிப்பிடுவது? இன்றைய சமுதாய அமைப்புப்படி, சாதியற்ற குழந்தை என்றுதானே கேவலமாக அழைக்கப்படுகிறதே? இதை ஒழிக்க வேண்டுமென்றால், மகன், தங்கள் பெயர்களுக்குப் பின்னால் ஜாதிப் பெயர்களைக் குறிக்கக்கூடாது என்று ஒரு சட்டம் இயற்ற இன்றைய ஆளும் தலைவர்கட்கு உறுதி பிறக்கவில்லையே! உறுதி பிறக்கவில்லை என்பதைவிட, அதை விரும்பவில்லை என்பதுதானே உண்மை?"

☆

"மனிதனின் பயத்தால் கடவுளை உண்டாக்கியிருக்கிறது; கடவுளுக்குக்கும் பிரதிநிதியாகக் குருக்கள் கூட்டம் தயாராகியது

மக்களின் நம்பிக்கைகளையும், ஆசைகளையும் தனது சுயநலத்திற்கும் பயன்படுத்தி கொண்ட குருக்கள் கூட்டத்தினரும், குலப்பாகுபாடுகளை ஏற்படுத்தத் துவங்கினார்கள்; கோவில் பூஜை செய்யும் உரிமை குருக்கள் வகுப்பாருக்கே உரியது என்றும், அதற்காக மானியங்கள் முதலியன வேண்டும் என்றும் ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

இப்படி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்ட இந்தச் சமுதாய அமைப்பை, நாம் மாற்றியாக வேண்டும். அதற்கான வழிவகைகளைக் காணவும், நம்மை நாமே அறிந்து கொள்ளவும், இத்தகைய மாநாடுகள் பேரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்."

கழகக்கூட்டங்கள்

★

பட்டணம்

அபிராமி அம்மன் திடலில்
23—8—54 மாலை 5 மணிக்கு
தலைவர்: சா. சருபதீன்
பேசுவோர்:
மா. மாணிக்கம்
வை. விழிநாதன்

★

குஞ்சாண்டியூர்

(மேட்டூர் அணைக்கு 3வது மைல்)
தி.மு. கழக துவக்க விழா
23—8—54 மாலை 6½ மணிக்கு
மாரியம்மன் கோவில் திடலில்
தலைவர்: கே. கே. ராமசாமி
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
க. சூ. சின்னசாமி
அ. பாலு
மே. ந. வெங்கிடாசலம்

திருமணம்

22—8—54 காலை 11 மணிக்கு மேல் 3 மணிக்குள்ளாக ஏர்வாடியில் தோழர் ஆ. மீ. அலீசெக் மரைக்காயர்—தோழியர் அலிபாத்து பேகம் திருமணம் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

23—8—54 காலை வெளியூர் தோழர்களுக்கு, ஏர்வாடியில், மணமகன் இல்லத்தில் வரவேற்பும்-உபச்சாரமும் நடைபெறும். மாலை 5-30 மணிக்கு மணமக்களைப் பாராட்டி தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். முத்து, கே. வி. கே. சாமி, இரா. க. தங்கப்பழம், எம். என். சிவசாமி, என். நடராசன், மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

காஞ்சியில் மாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முழுத் தலைவர் சி. வி. எம். அண்ணாமலை முன்மொழிந்தார். தலைவர் பிரேரணையை வழிமொழிந்து தோழர்கள் ஏ. கே. வேலன், காஞ்சி-மணிமொழியார், சி. வி. ராசகோபால், நடிகர் நாராயண பிள்ளை ஆகியோர் பேசினர்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் நீண்ட நேரக் கைதட்டலுக்கிடையேயும் மாநாட்டில் கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்களின் ஆரவாரத்திற்கும் இடையே எழுந்து தனது தலைமை உரையை ஆற்றினார்.

தலைமை உரைக்குப் பின்னர் தோழர் டி. கே. தாமரைச் செல்வன், 'பகுத்தறிவும் அருள் நெறியும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிக்கொண்டிருக்கிறார்.

காஞ்சீபுரம் நகரம் முழுமையும் வளைவுகளால் அலங்கரிக்கப்பட்டு திருவிழா கோலத்தில் காட்சியளிக்கிறது.

செய்தி முடியவில்லை.

தூத்துக்குடி சதி வழக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டியல் உண்டா என்று தெரியாது; தி. மு. கழகத்திற்கு அலுவலகம் உண்டா என்று தெரியாது; தி. மு. கழகத்திற்கு நான் தொண்டனாக இருந்தது கிடையாது; 14-ம் தேதிக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே இரயிலை நிறுத்தப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டேன்; நான் வாசகசாலை மாடிக்கும் போவதற்கு முன்னாலே அங்கு தொண்டர்கள் சேர்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்; அது ஒரு இலவச வாசகசாலை என்று எனக்குத் தெரியாது; முதலாவது சாட்சியுடன் நான் படியில் நின்றேன்; அவர்கள் எப்பொழுது வந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது; கதவுகள் திறந்தே இருந்தன; கோதண்டராமன், சபினார் இவர்கள் எனக்கு முந்திவந்தார்களா அல்லது பிந்தி வந்தார்களா என்று எனக்குத் தெரியாது.

உள்ளே இருந்தவர்களில் எவரும் என்னிடம் பேசவில்லை; மற்றவர்களிடம் பேசினாரா என்பது எனக்குத் தெரியாது; நாங்கள் திரும்பி வரும்போது படிக்கட்டில் வேறு எட்டு பேர் நின்று கொண்டிருந்தார்கள்; கோதண்டராமனும் வெங்கடசுபினார் இருவரும் உச்சிப் படியில் நின்று கொண்டிருந்தார்கள்; நாங்கள் மூவரும் கொள்கையடிப்பது, திவைப்பது சரியல்ல என்று பேசிக்கொண்டோம்; தலைவர்கள், அவர்களுக்குள்ளே பேசிக் கொள்ளவில்லை; தலைவர்கள் மற்றவர்களிடமும் பேசவில்லை; ஒருவரும் எதிர்த்துப் பேசவில்லை; நாங்கள் எதிர் பேசியதை தங்கப்பழமும், சிவசாமியும் எதிர்த்தார்கள் என்று நான் கீழ்கோர்ட்டில் கூறியது ஞாபகமில்லை; வாசகசாலையிலிருந்து நான் வீட்டுக்கு வரும்போது இரவு 9 மணி; நான் கேள்விப்பட்ட சம்பவங்களைப் பற்றி என் மனைவியிடமோ, காம்பவுண்டில் உள்ளவர்களிடமோ நான் ஏதும் பேசவில்லை; முதல் சாட்சியின் தகப்பனுடன் நான் கொத்தவேலைக்குப் போவதுண்டு; போலீசார் என்னை விசாரிக்கும் பொழுது சபினார், கோதண்டராமன், சங்கரநாராயணன் எவரும் இல்லை; நான் கண்ட சம்பவங்களைப் போலீஸ் பீட்டில் யாரிடமும் சொல்லவில்லை."

(வழக்கு விசாரணையின் தொடர்ச்சி நாளை வெளிவரும்)

கோவா துப்பாக்கிப் பிரயோகம்!

இந்தியாவின் ஆட்சேபம்

ஆயுதங்கள், வெடி மருந்துகள் கப்பலில் வினைகின்றன!

புதுடில்லி, ஆக. 16—கோவா கோட்டையை அமைதியான முறையில் கைப்பற்றிய தொண்டர்கள் மீது போர்ச்சுகீசியத் அருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது பற்றி இந்திய சர்க்காரை ஆட்சேபித்திருக்கிறது.

புதுடில்லியில் உள்ள போர்ச்சுகீசியத் தூதராலய அதிகாரியான டாக்டர் வாஸ்கோ கார்னிடம் இந்த ஆட்சேபக் குறிப்பு கொடுக்கப்பட்டது.

அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் செய்யும் தொண்டர்களைத் துன்புறுத்தும் பலாத்காரப் போக்கு இந்தியாவில் விரும்பத்தகாத, கவலைக்கிடமான நிலைமைகளை உண்டாக்கும் என்று அக்குறிப்பில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

கப்பல் வருகிறது

டாமனிலிருந்து ஒரு கப்பல் ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் ஏற்றிக்கொண்டு கோவா

ஜில்லா போர்டு தேர்தல்

உழைப்பாளர் கட்சி காங்கிரசுடன் சேராது!

அமைச்சர் இராமசாமிக்கு தோல்வி?

20—8—54 மாலை விழுப்புரத்தில் கனம் எஸ். எஸ். இராமசாமி (படையாச்சி) அவர்கள் தலைமையில் நடைபெற்ற வன்னியகுல பிரமுகர்கள் கூட்டத்தில், அமைச்சர் அவர்கள் ஜில்லா போர்டு தேர்தலில், காங்கிரசுடன் உழைப்பாளர் கட்சி சேர்ந்துவிட வேண்டுமென்றும், இல்லையேல் தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யும் நிலைமை ஏற்படும் என்றும் கூறினாராம்!

கனம் அமைச்சரின் போக்கை தோழர் அரங்கநாதன் ஆதரித்துப் பேசினாராம். உழைப்பாளர் கட்சி காங்கிரசுடன் இரண்டறக் கலப்பது என்ன திட்டம் அங்கு கூடியிருந்த பெரும்பான்மையான உழைப்பாளர் கட்சித் தோழர்களுக்கும் பிடிக்கவில்லையென்றும், அதனால் கூட்டத்தில் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது, என்றும் தெரியவருகிறது.

'காங்கிரசுடன் உழைப்பாளர் கட்சி சேர இயலாது; கனம் அமைச்சர் தனது முடிவை மாற்றவேண்டும்,' என்று உழைப்பாளர் கட்சி செயலாளர் பி. ஜி. நாராயணசாமி அவர்கள் எடுத்துச் சொன்னாராம்.

எவ்வித முடிவும் ஏற்படாமல் கூட்டம் குழப்பத்தில் முடிவடைந்ததாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

மேற்கொண்டு விபரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

துப்பாக்கி பிரயோகத்தில் மாண்டவர்

ஆந்திர சர்க்கார் நஷ்டஈடு தருகிறது

1952 டிசம்பர் 15-ம் தேதி ஆந்திர ராஜ்ய கிளர்ச்சியின் போது போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டு போன ஸ்ரீராமலு என்பவரின் தகப்பனுக்கு ஆந்திர சர்க்கார் ரூ 500 நஷ்டஈடு கொடுக்க உத்தரவிட்டிருக்கின்றனர்.

விற்கு அவசரமாக வந்துகொண்டிருக்கிறதாம்.

அருப்புகளுக்கு உணவளிப்பதற்காக கைப்பற்றப்பட்ட ஏராளமான உணவுப் பொருள்களும், அக்கப்பலில் கோவாவிற்கு அனுப்பப்படுகிறது. டாமனில் பால் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறதாம்! ஹோட்டல்களில் பால் சம்பந்தப்பட்ட பண்டங்கள் விற்பனை செய்வது தடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

தம்மிடமுள்ள உணவு தானியங்கள் பற்றி சர்க்காருக்குத் தெரிவிக்கவில்லை என்பதற்காக டாமனில் இரண்டு கிடைப் பிரபுக்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருப்பதுடன், அவர்களிடமிருந்த உணவுத் தானியங்களும் கைப்பற்றப்பட்டன என்று தெரிகிறது.

இராயபுரம் ... அழகிரி ... தோழர் இரா. இளஞ்செழியன், எம். ஏ., ... அழகிரி அவர்களைத்தில் ... (இந், ... நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) ... நிகழ்கிறது. தலைமை: இ. ... ஆர் ...